Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

| | |
|---|---|
| Calendar | **CC. No.131/2019** |
| Deposition of Sworn Statement | **PW5** |
| Name | : இராமசாமி |
| Father's Name/Husband Name | : பெருமாள் |
| Village | : அஸ்தகிரியூர் |
| Taluk | : பாப்பிரெட்டிபட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13.07.2026**

**எதிர்கள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது அஸ்தகிரியூரில் வசித்துக்கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன்.

கடந்த சுமார் 8 வருடங்களுக்கு முன்பு அ.சா.1 வீட்டின் முன்பு அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். நான் அ.சா.1 வீட்டிற்கு சென்று பார்த்தபோது அ.சா.1 வீட்டின் வெளியே கட்டில் மேல் படுத்துக்கொண்டிருந்தார். அவரை நான் தர்மபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன்.

என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

அந்த கையொப்பம் எதற்காக செய்தேன் என்றால் அ.சா.1 ஐ மருத்துவமனையில் சேர்த்ததற்காக போட்டேன்.

**பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறீயீடு செய்யப்படுகிறது.**

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசுதரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக்கி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆஜர் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான்.

கடந்த 02.08.2018 ம் தேதி நானும், எனது உறவினர் பெருமாளும் ஆகியோர்கள் பெருமாள் வீட்டருகே இருந்தபோது கடத்தூர் போலீசார் இவ்வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், மகஜரில் நானும், பெருமாள் என்பவரும் சாட்சிகளாக கையொப்பமிட்டோம் என்றும், போலீஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**